**த. நா.ச.பே. எண் : 006** **நாள் : 01.09.2015**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் 110–ன் கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை 1.9.2015

---

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சிறைக் கைதிகளை சீர்திருத்தும் இடமாக; அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் இடமாக; மீண்டும் குற்றங்கள் ஏற்படா வண்ணம் தடுக்கும் இடமாக விளங்கிக் கொண்டிருக்கும் சிறைகளின் கட்டமைப்பு, மற்றும் சிறைக் கைதிகளின் வாழ்க்கைத் தரம் ஆகியவற்றை மேம்படுத்தி; சிறைப் பணியாளர்களுக்கு தேவையான வசதிகளை செய்து கொடுப்பதில் இந்தியாவிற்கே வழிகாட்டியாக எனது தலைமையிலான தமிழ்நாடு அரசு விளங்கிக் கொண்டு இருக்கிறது.

இப்படிப்பட்ட இன்றியமையாத் துறையை மேலும் மேம்படுத்தும் வகையில், பின்வரும், புதிய அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

1. தமிழக சிறைத் துறையின் கீழ் செயல்பட்டு வரும் 9 மத்திய சிறைகள்; 3 பெண்கள் தனிச் சிறைகள்; பார்ஸ்டல் பள்ளி (வளர் இளம் பருவத்தினர் சீர்திருத்தப் பள்ளி); மற்றும் மாவட்டச் சிறை, புதுக்கோட்டை ஆகியவற்றில் உள்ள மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படும் சிறைவாசிகளுக்கு அவசர மருத்துவ சிகிச்சை அளிப்பது மற்றும் சிறைகளிலுள்ள 30 அவசர கால ஊர்திகளிலும்; உயிர் காக்கும் மருத்துவ உபகரணங்களை இருப்பில் வைத்திருப்பது ஆகியவை இன்றியமையாததாகும். இதனைக் கருத்தில் கொண்டு, 9 மத்திய சிறைகள்; 3 பெண்கள் தனிச் சிறைகள்; ஒரு பார்ஸ்டல் பள்ளி மற்றும் மாவட்ட சிறை ஆகியவற்றில் உள்ள 13 மருத்துவமனைகள் மற்றும் 30 அவசர கால ஊர்திகளுக்கு 2 கோடியே 34 லட்சம் ரூபாய் செலவில் ஆக்ஸிஜன் (OXYGEN) புளோ மீட்டர்; டிராலி, மல்டி சேனல் மானிட்டர், (Multi-Channel Monitor), வெண்டிலேட்டர் முதலிய 13 வகையான உயிர் காக்கும் மருத்துவ உபகரணங்கள் வாங்கி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. சிறைத் துறைப் பணியாளர்களின் நலனைக் கருத்திற்கொண்டு, சிறைப் பணியாளர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் 100 குடியிருப்புகள் கட்டுவதற்கு அரசால் கொள்கை அளவில் ஏற்கெனவே ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி, 2012–2013; 2013–2014; மற்றும் 2014–2015 ஆகிய ஆண்டுகளில், தலா 100 குடியிருப்புகள் வீதம் 300 குடியிருப்புகள் கட்டுவதற்கு அரசு ஆணையிட்டுள்ளது. இவற்றில் 100 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டு சிறைத் துறை பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. 100 குடியிருப்புகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், 100 குடியிருப்புகள் கட்ட தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தால் ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டு பரிசீலனையில் உள்ளன.

நடப்பாண்டில் மேலும் 100 களப் பணியாளர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்கும் வகையில், 14 கோடியே 57 லட்சம் ரூபாய் செலவினத்தில், புழல் வளாகம்; பாளையங்கோட்டை மற்றும் கோவை ஆகிய மத்திய சிறை வளாகங்களில் தலா 30 குடியிருப்புகள்; புதுக்கோட்டை, பார்ஸ்டல் பள்ளி மற்றும் மாவட்ட சிறை வளாகத்தில் 10 குடியிருப்புகள் என மொத்தம் 100 குடியிருப்புகள் கட்ட அனுமதி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அறிவிப்புகள் சிறைத் துறை மேம்படவும், சிறைப் பணியாளர்கள் மேலும் செம்மையாகப் பணியாற்றவும் வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*****

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கண்ணால் காண முடியாத, செயலால் மட்டுமே பார்க்கக் கூடியதும், நாட்டின் பொருளாதாரத்திலும், மனிதனின் வாழ்வாதாரத்திலும் முக்கியப் பங்கு வகிப்பதுமான மின்சாரத் துறையில் தமிழகம் தன்னிறைவு பெறும் அளவுக்கு கடந்த நான்கு ஆண்டுகளில் எனது தலைமையிலான அரசு அளப்பரிய சாதனைகளை செய்துள்ளது.

எனது தலைமையிலான அரசு, 2011 ஆம் ஆண்டில் பொறுப்பேற்றதிலிருந்து தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக மின் திட்டங்கள், கூட்டு முயற்சி திட்டம், மத்திய மின் உற்பத்தி திட்டங்களிலிருந்து கிடைக்கும் பங்கு மற்றும் மின் கொள்முதல் மூலம், இதுவரை 5954.5 மெகாவாட் மின்சாரம் மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது. இதன் பயனாக, தமிழக மக்களுக்கு தரமான மற்றும் தடையில்லா மின்சாரம் கிடைக்கப் பெற்று வருகின்றது.

மேலும், அதிகரித்து வரும் மின் தேவையை கருத்திற்கொண்டு எனது தலைமையிலான அரசு ஏற்கெனவே பல புதிய மின் உற்பத்தித் திட்டங்களை தொடங்க அறிவித்திருந்தது. அதில் 660 மெகாவாட் திறன் கொண்ட எண்ணூர் அனல் மின் நிலைய விரிவாக்கத் திட்டம் மற்றும் தலா 660 மெகாவாட் திறன் கொண்ட இரண்டு அலகுகள் உடைய எண்ணூர் சிறப்பு பொருளாதார மண்டல அனல் மின் திட்டங்களுக்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும், எதிர்கால மின் தேவையை கருத்திற் கொண்டு 800 மெகாவாட் திறன் கொண்ட, வட சென்னை அனல் மின் திட்டம் நிலை–III, தலா 800 மெகாவாட் திறன் கொண்ட இரண்டு அலகுகள் உடைய உப்பூர் அனல் மின் திட்டம், தலா 660 மெகாவாட் திறன் கொண்ட இரண்டு அலகுகள் உடைய உடன்குடி அனல் மின் திட்டம் மற்றும் 660 மெகாவாட் திறன் கொண்ட எண்ணூர் மாற்று அனல் மின் திட்டம் ஆகிய திட்டங்களுக்கான ஆரம்பகட்ட பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 2000 மெகாவாட் சில்லஹல்லா நீரேற்று புனல் மின் திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரித்தலுக்கான பணி நடைபெற்று வருகிறது.

இதே போன்று மின் கட்டமைப்பை வலுப்படுத்தும் விதமாக, கடந்த நான்கு ஆண்டுகளில் பல்வேறு துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதன் தொடர்ச்சியாக, நடப்பாண்டில் மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்களை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

1. தமிழகத்தை மின் நிலைமையில் தன்னிறைவு பெற்ற மாநிலமாக மாற்ற தமிழ்நாடு தொலைநோக்குப் பார்வை 2023 ஆவணத்தில் நிர்ணயித்த இலக்கான கூடுதல் 20,000 மெகாவாட் மின் நிறுவுத் திறன் ஏற்படுத்தும் நோக்குடன் பல்வேறு திட்டங்கள் என்னால் அறிவிக்கப்பட்டு அதற்கான பணிகள் துவங்கப்பட்டுள்ளன. ராமநாதபுரம் மாவட்டம் கடலாடி தாலுகாவில் 4,000 மெகாவாட் திறன் கொண்ட ஒரு மாபெரும் அனல் மின் திட்டம் 24,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்திற்குத் தேவையான சுமார் 3000 ஏக்கர் நிலம் கொண்ட நல்லாம்பட்டி வருவாய் கிராமத்தில் கண்டறியப்பட்டுள்ளது. தேவையான திட்ட அனுமதிகளை பெற்ற பின் இம்மின் திட்டம் தொடங்கப்படும்.

2. மின் கட்டமைப்பை வலுப்படுத்தும் வகையில் 400 கிலோ வோல்ட் மற்றும் 230 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மின்

கட்டமைப்பை மேலும் வலுப்படுத்தும் வகையில், வட சென்னையில் **765/400** கிலோ வோல்ட் **3x1500** எம்.வி.ஏ. திறன் கொண்ட தொகுப்பு துணை மின் நிலையம் **2,335** கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும். இந்த தொகுப்பு துணை மின் நிலையம் அரியலூர் **765/400** கிலோ வோல்ட் துணை மின் நிலையம் மற்றும் **400** கிலோ வோல்ட் புளியந்தோப்பு, துணை மின் நிலையங்களுடன் இணைக்கப்பட்டு வட சென்னை மற்றும் எண்ணூரில் அமையவிருக்கும் அனல் மின் நிலையங்களில் உற்பத்தியாகும் மின்சாரத்தை வெளியேற்ற வழிவகை செய்யும்.

**3.** மேலும், அரியலூரில் **765/400** கிலோ வோல்ட் **2** x **1500** எம்.வி.ஏ., திறன் கொண்ட துணை மின் நிலையம் **2121** கோடியே **45** லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் துணை மின் நிலையம் **765/400** கிலோ வோல்ட் திருவலம் துணை மின் நிலையத்துடன் இணைக்கப்பட்டு வட சென்னை மற்றும் எண்ணூரில் அமையவிருக்கும் அனல் மின் நிலையங்களில் உற்பத்தி செய்யப்படவிருக்கும் மின்சாரத்தை கடத்துவதற்கு துணை புரியும்.

**4.** கோயம்புத்தூர் மாவட்டத்தில் **765/400** கிலோ வோல்ட் **2** x **1500** எம்.வி.ஏ. திறன் கொண்ட துணை மின் நிலையம் **2,335** கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த துணை மின் நிலையம் அரியலூர் **765/400** கிலோ வோல்ட் துணை மின் நிலையம் மற்றும் **400** கிலோவோல்ட் எடையார் பாளையம், ராசிப்பாளையம் துணை மின் நிலையங்களுடன் இணைக்கப்பட்டு, கோவை, சேலம் மற்றும் மேட்டூர் பகுதிகளின் மின் கட்டமைப்பை வலுப்படுத்தும்.

மேற்காணும் அறிவிப்புகள் மூலம் தமிழகம் மின்சாரத்தில் மின் மிகை மாநிலம் என்ற நிலையைப் பெறுவதோடு, தொழில் வளர்ச்சி மேன்மையடைந்து வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் வழி வகுக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

*****

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் முக்கியப் பங்கினை வகிப்பதிலும், மரபு மற்றும் பண்பாட்டினை பாதுகாப்பதிலும், வேலை வாய்ப்புகளை உருவாக்குவதிலும், முக்கியப் பங்கு வகிக்கும் கைத்தறி மற்றும் துணிநூல் துறையை ஊக்குவிக்கும் வண்ணமும், இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள நெசவாளர்களின் சமூக பொருளாதார நிலையினை மேம்படுத்தும் வண்ணமும் பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு கடந்த நான்கு ஆண்டுகளாக எடுத்து வருகிறது.

கைத்தறி மற்றும் துணிநூல் தொழிலையும், நெசவாளர்களையும் மேலும் ஊக்குவிக்கும் வகையில், பின்வரும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

1. தமிழ்நாடு பல ஆண்டுகளாக இந்திய ஜவுளித் தொழிலில் முன்னோடி மாநிலமாக விளங்குகிறது. ஜவுளித் தொழிலின் பல்வேறு பிரிவுகளான கைத்தறி, விசைத்தறி, நூற்புப் பிரிவு, ஆயத்த ஆடை மற்றும் பின்னலாடை பிரிவுகளை மேலும் வலுப்படுத்தி, வளர்ச்சியினை அடையும் விதமாக அனைத்து பிரிவுகளின் கருத்துக்களைப் பெற்று ஒருங்கிணைந்த வளர்ச்சியினை அடையும் விதமாக ஒவ்வொரு பிரிவிலிருந்தும் பிரதிநிதிகளை உள்ளடக்கி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் **“மாநில ஜவுளி**

**ஆலோசனைக் குழு''** ஒன்று அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. தமிழ்நாட்டில் உள்ள 83 பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் மூலம் ஆண்டொன்றுக்கு சுமார் 200 கோடி ரூபாய் முதல் 220 கோடி ரூபாய் மதிப்பிலான பட்டுத் துணிகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் ஆகியவற்றின் பட்டு ரக விற்பனையினை மேம்படுத்தவும் சரக்கு இருப்பினை வெகுவாகக் குறைக்கவும் அதன் மூலம் நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பினை உறுதி செய்யவும், **பட்டு ரக துணிகளின் விற்பனைக்கு 15 விழுக்காடு சிறப்புத் தள்ளுபடி வழங்கப்படும்** என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் அரசுக்கு 10 கோடி ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும்.

3. ஜவுளித் தொழிலில், சர்வதேச தரத்துடன் கூடிய உட்கட்டமைப்பு வசதிகளை ஒரே இடத்தில் ஏற்படுத்தும் வகையில், மத்திய அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா அமைக்கும் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் 14 ஜவுளிப் பூங்காக்கள் 983 கோடியே 41 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒப்பளிக்கப்பட்டது. தமிழ்நாட்டில் அதிக எண்ணிக்கையிலான ஜவுளிப் பூங்காக்களை உருவாக்குவதன் மூலம் ஜவுளித் தொழில் வளர்ச்சி அடையும். தமிழ்நாட்டில் உள்ள ஜவுளி மையங்களில் சிறிய அளவிலான ஜவுளிப் பூங்காக்கள் அமைப்பதை ஊக்குவிக்கும் வகையிலும், உட்கட்டமைப்பு வசதிகள், ஏற்படுத்துவதற்கும் **ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா அமைக்க முன் வரும் தொழில் முனைவோர்களுக்கு 2 கோடியே 50 லட்சம் ரூபாய் வரை நிதி உதவி தமிழக அரசால் வழங்கப்படும்** என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. புதிய பதனிடுதல் பூங்காக்கள் உருவாக்குவதுடன் அல்லாமல், ஏற்கனவே ஏற்படுத்தப்பட்ட பதனிடும் குழுமங்களை மேம்படுத்த, குறிப்பாக, பதனிடும் தொழிலுக்கு நீர் மற்றும் கழிவுநீர் மேலாண்மை பிரிவுகளை மேம்படுத்த மைய அரசு ''ஒருங்கிணைந்த பதனிடும் மேம்பாட்டுத் திட்டம்'' என்ற புதிய திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது. ஜவுளித் துறையில், தரமான சுற்றுச்சூழல் மற்றும் தொழில்நுட்பத்தினை ஏற்படுத்தி உலகளாவிய போட்டியினை எளிதாக எதிர்கொள்வதே ஒருங்கிணைந்த பதனிடும் மேம்பாட்டு திட்டத்தின் முதன்மை நோக்கமாகும். மத்திய அரசின் ஒருங்கிணைந்த பதனிடும் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ஜவுளித் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழில் நிறுவனங்களுக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்ட **திட்ட மதிப்பீட்டில் மாநில அரசின் பங்காக 25 விழுக்காடு அளவிற்கு நிதி உதவி வழங்கப்படும்** என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. மத்திய அரசின் ஜவுளி அமைச்சகத்தின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வந்த கிரியா ஊக்கத் திட்டத்திற்கு வழங்கப்பட்டு வந்த நிதியுதவிகள் சிலவற்றை 2015–2016 ஆம் ஆண்டு முதல் மத்திய அரசு நிறுத்திவிட்டது. இருப்பினும், தமிழக பட்டு விவசாயிகளின் நலன்களைத் தொடர்ந்து பாதுகாத்திடும் வகையில் நிறுத்தப்பட்ட சிலவற்றில் முக்கிய திட்டங்களுக்கு மத்திய அரசின் பங்கினையும் சேர்த்து மாநில அரசு 2015–2016 ஆம் ஆண்டு முதல் கூடுதல் நிதியினை வழங்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

- 5 கோடியே 25 லட்சம் ரூபாய் மானியம் வழங்கி, 5,000 ஏக்கரில் உயர் விளைச்சல் தரும் மல்பரி ரகங்களை நடவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.
- 5 கோடியே 25 லட்சம் ரூபாய் செலவில் நவீன பட்டுப்புழு வளர்ப்புத் தளவாடங்கள் மற்றும் விவசாய உபகரணங்கள் 1,000 விவசாயிகளுக்கு வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.
- தனியாக பட்டுப்புழு வளர்ப்புக் குடில் கட்ட 1,000 பட்டு விவசாயிகளுக்கு 8 கோடியே 5 லட்சம் ரூபாய் மானியம் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.
- 4 கோடி ரூபாய் மானியத்தில், பட்டு விவசாயிகளுக்கு 1400 மல்பரி ஏக்கரில் சொட்டு நீர்ப்பாசனம் அமைத்திட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் திட்டங்கள் 22 கோடியே 55 லட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்காணும் அறிவிப்புகள், ஜவுளித் தொழில் உற்பத்தி பெருகவும், நெசவாளர்களின் வாழ்வு மேலும் பொலிவுறவும் வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*****

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**